குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்,
முன்னிலை: – திரு.S.சதாம் உசேன், B.A.L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ), ஓமலூர்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09–ஆம் நாள் வியாழக்கிழமை

CMP No: 285/2026
in
Cr.No.426/2026
in
(ஓமலூர் காவல்நிலையம்)

திரு.வடிவேல் த/பெ.ஜெயவேல்,
.

.....மனுதாரர்/எதிரி

//எதிர்//

காவல் உதவி ஆய்வாளர்,
ஓமலூர் காவல் நிலையம்,
குற்ற எண்.426/2026,
சட்டபிரிவுகள்.U/s.305(a),331(4),62 BNS Act 2023.

.... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 07.07.2026–ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.முகிலன் அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

இம்மனுவானது பிரிவு 480 BNS– ன் கீழ் மனுதாரரை பிணையில் விட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கின் வரலாறு சுருக்கம்:

இவ்வழக்கின் வாதியின் பெயர் வைத்தீஸ்வரி என்பவர் மோளாண்டிப்பட்டி என்ற கிராமத்தில் குடியிருந்து கொண்டு வருவதாகவும், தனது கணவர் ஜெயராஜ், மகள்கள் ரித்திகாஸ்ரீ, கோபிகாஸ்ரீ ஆகியோருடன் குடியிருந்து கொண்டு வருவதாகவும், தான் வீட்டில் டைலரிங் வேலை செய்து வருவதாகவும், தனது கணவர் லாரி டிரைவர் வேலை

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.09 17:06:59 +0530

செய்து வருவதாகவும், தனது கணவர் வேலைக்கு சென்று விட்டு மாதக்கணக்கில் வெளியே தங்கி வேலை செய்து வீட்டிற்கு வருவார் என்றும், கடந்த மே மாதம் 31ம் தேதி தனது கணவர் வீட்டிற்கு வந்த பின்னர் வேலைக்கு சென்று விட்டார் என்றும், தானும் குழந்தைகள் மட்டும் தான் வீட்டில் தனியாக இருப்பதாகவும், இந்நிலையில் 04.07.2026ம் தேதி தானும் தனது மகள்கள் இரண்டு பேரும் இரவு சுமார் 10.00 மணியளவில் சாப்பிட்டு தூங்கி விட்டதாகவும், 05.07.2026ம் தேதி நள்ளிரவு சுமார் 2.30 மணியளவில் தன் வீட்டின் பீரோ திறக்கும் சத்தம்கேட்டு தான் கண்விழித்து பார்த்தபோது தனது ஊரைச் சேர்ந்த வடிவேல் என்பவர் தனது வீட்டின் பீரோவை திறந்து அதில் இருந்த தனது கவரிங் செயினை எடுத்தான் அதை பார்த்த தான் சத்தம் போட்டு கத்தினேன் உடனே வடிவேல் அவன் கையில் இருந்த என் கவரிங் செயினை அங்கேயே போட்டுவிட்டு தனது வீட்டில் இருந்து தப்பி ஓடி விட்டதாகவும், பிறகு இது குறித்து தாரமங்கலம் காவல்நிலைய குற்றவழக்கு எண்.426/2026, சட்டபிரிவு.305(a),331(4),62 BNS Act 2023. நாள் 05.07.2026 ன் படி பதிவு செயய்யப்பட்டது.

மனுவின் சுருக்கம்:

மனுதாரர் பிரிவு U/s.305(a),331(4),62 BNS Act 2023. குற்றத்திற்காக 05.07.2026 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ளார். மனுதாரர் மேற்படி குற்றத்தை செய்யவில்லை என்றும், மேற்படி குற்றம் ஆனது மரண தண்டனையோ அல்லது ஆயுள் கால தண்டனையோ விதிக்க கூடிய குற்றம் இல்லை என்றும், மேலும் மனுதாரர் மதிக்கத்தக்க குடிமகன், அவர் மறைந்து கொள்ள மாட்டார், நீதிமன்றம் எதிர்பார்க்கும் போதுமான பிணைகளையும், பிணை பத்திரத்தையும், எழுதி தருவதற்கு தயாராக உள்ளார் என்றும், மேலும் எதிரி 5 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார் என்றும், எதிரியை பிணையில் விடுவித்தால் நீதிமன்றம் விதிக்கும் எந்தவித நிபந்தனைக்கும் கட்டுப்பட தயாராக உள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

அரசு தரப்பின் பதில்

எதிர்மனுதாரர் காவல் துறை மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கு புலன் விசாரணை ஆரம்ப நிலையில் இருப்பதால் எதிரியை பிணையில் விட்டால் அவர் மீண்டும் இது போன்ற குற்றச்செயலில் ஈடுபடுவார் என்றும், எதிரியை பிணையில் விட்டால் சாட்சிகளை கலைக்க நேரிடும் என்றும், எதிரி தலைமறைவு ஆகிவிடுவார்

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.09 17:07:07 +0530

என்றும், மேற்கண்ட காரணங்களுக்காக மிகவும் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தனர்.

தீர்வு:

இரு தரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இவ்வழக்கின் கோப்புகளை பார்க்கும் போது எதிரியானவர் 05.07.2026 அன்று பிரிவு 305(a),331(4),62 BNS Act 2023, குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் இந்த குற்றத்தை செய்யவில்லை என்றும், இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 5 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளார் என்றும், அவரை பிணையில் விட வேண்டும் என்றும் வாதிட்டார்.

எதிர்மனுதாரர் தரப்பில் கொடுக்கப்பட்ட ஆட்சேபனை பார்க்கும்போது, இவ்வழக்கின் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் இந்த வழக்கில் உள்ள சாட்சிகள் மற்றும் சங்கதிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகி விடுவார் என்றும், இவ்வழக்கு எதிரி மீது வழக்கு புலன் விசாரணையில் உள்ளது என்றும், மேலும் எதிரி/மனுதாரர் தற்சமயத்தில் பிணையில் விடுவது இந்த வழக்கின் விசாரணைக்கு சரியானதாக இருக்காது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

பொதுவாக **'bail is the rule and Jail is the exception'** என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ள போதிலும் இந்த வழக்கின் தன்மையை பார்க்கும் போது மனுதாரரை பிணையில் விடுவது தற்போதைய தருணத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு சரியானதாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. முடிவாக மேற்கூறிய காரணங்களுக்காக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூலை வியாழக்கிழமை 09-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.09 17:07:11 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.